## PRESS NOTE

## SURPRISE CHECK BY DVAC AT BUILDING DEVELOPMENT OFFICE, POONAMALLE

At the BDO offices, works such as layout approval, plan approval and regularization of un-authorized plots are being carried out. The Government fees will be paid in banks through challan payment. There is no business for money transaction in the BDO office. But today 17.02.2023 upon receiving credible information, that the officials at the Office of the Block Development Office, Poonamalle are collecting bribe from applicants/contractors for the above said official works, a joint surprise check by the DVAC officials from Chennai City-II along with the District Inspection Cell officer was conducted at the Office of the Block Development Office, Poonamalle. During the surprise check, Rs.1,60,000/- unaccounted cash was seized. Rs.60,000/- unaccounted cash was seized from the table of Tmt.Rehanabegum, Accountant. Rs.1,00,000/- unaccounted cash was seized from Tr.D.Nagaraj (private person) applicant for regularization of 10 plots who was in the cabin of BDO Tr.Sivakumar. Tr.Nagaraj stated that he brought the cash on the instruction of BDO Tr.Sivakumar. Enquiry is going on.

# பத்திரிக்கை செய்தி

## ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை அதிகாரிகளால் வட்டார வளர்ச்சி அலுவலகம், பூந்தமல்லி அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை

வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் வரைபட அனுமதி, திட்ட அனுமதி மற்றும் அங்கீகாரம் இல்லாத மனைகளை வரன் முறைப்படுத்தல் போன்ற பணிகள் நடந்து வருகின்றன. எந்த திட்ட ஏரியா மற்றும் மனைகள் அளவை பொறுத்து அரசின் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்படும். நிர்ணயம் செய்த பணத்தை விண்ணப்பதாரர்கள் பணம் செலுத்துசீட்டு (Challan) மூலம் வங்கிகளில் பணம் செலுத்த வேண்டும். எனவே வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பணப்பரிவர்த்தனைக்கான தேவைகள் இல்லை.

ஆனால் வட்டார வளர்ச்சி அலுவலகம், பூந்தமல்லி அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் ஒப்பந்ததாரர்களிடம் மேற்கூறிய காரணங்களுக்காக பணம் லஞ்சம் பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 17.02.2023ம் தேதி வட்டார வளர்ச்சி அலுவலகம், பூந்தமல்லி அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-II அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து திடீர் சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.1,60,000/- கைப்பற்றப்பட்டது. திருமதி.ரிகானாபேகம், கணக்காளர் என்பவரின் மேஜை மீதிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.60,000/-ம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சிவக்குமார் அவர்களின் அறையில் 10 வீட்டு மனைகளை முறைப்படுத்த வந்திருந்த தனி நபர் திரு.நாகராஜ் என்பவரிடமிருந்து ரொக்கம் ரூ.1,00,000/-ம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ரூ.1,00,000/-யை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சிவக்குமார் என்பவரின் உத்திரவுபடி கொண்டு வந்ததாகவும் தனி நபர் திரு.நாகராஜ் என்பவர் தெரிவித்தார். இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.


ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
தமிழ் வாழ்க


RESERVE BANK OF INDIA
₹500